காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி

8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — 9444 288784
Dr Sathish Rajkumar — 9445 401793
Dr Shanthi R — 9884 650945
Dr Salins R — 87780 87742
Dr Praveena E — 9944 100443

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 7 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 118

உத்தராகண்டில் தொழில், சுற்றுலா வளர்ச்சியுடன் எல்லைக் கிராமங்களின் மேம்பாட்டுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது மத்திய

சென்னை – 7 நவம்பர், 2026 உத்தராகண்டில் தொழில், சுற்றுலா வளர்ச்சியுடன் எல்லைக் கிராமங்களின் மேம்பாட்டுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது மத்திய அமைச்சர் அமித் ஷா.

உத்தராகண்டில் தொழில், சுற்றுலா வளர்ச்சியுடன் எல்லைக் கிராமங்களின் மேம்பாட்டுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

டேராடூனில் நடைபெற்ற உத்தராகண்ட் மாநில தின விழாவில் பேசிய அவர், 2022 முதல் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 50 சதவீதமும், தனிநபர் வருமானம் 40 சதவீதமும் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் ரூ.3.56 லட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டதில், ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்று அவர் தெரிவித்தார். ரூ.1,508 கோடி மதிப்பிலான 63 வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் பொது சிவில் சட்டம், தேர்வு முறைகேடுகளைத் தடுக்கும் கடுமையான சட்டம் ஆகியவை அமல்படுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். 35,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் சுற்றுலாத் துறை 380 சதவீதம் வளர்ந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். வெளியில் இருந்து பணம் பெறுதலைச் சார்ந்திருக்கும் பொருளாதாரத்திலிருந்து தொழில்துறைப் பொருளாதாரமாக மாநிலம் மாற்றப்பட்டுள்ளதாக அமித் ஷா கூறினார்.

தில்லி–டேராடூன் பொருளாதார வழித்தடம், சார்தாம் சாலைத் திட்டம், ரயில்வே, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட திட்டங்களுடன் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30 சதவீத இடஒதுக்கீடும், கூட்டுறவு அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். 51 எல்லைக் கிராமங்களில் ரூ.270 கோடியில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரிசி விற்பனை இலக்கு 50 லட்சம் டன்னாக உயர்வு: இருப்பு விவரங்களை வாரந்தோறும் வெளியிட உத்தரவு

சென்னை – 7 நவம்பர், 2026 நாட்டில் அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், பதுக்கல், கள்ளச்சந்தை விற்பனையைத் தடுக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

அரிசி, நெல் இருப்பு விவரம் கட்டாயம்: நாடு முழுவதும் அரிசி, நெல் இருப்பு வைத்துள்ள வியாபாரிகள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள், பெரிய வணிக நிறுவனங்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் ஆகியோர் தங்களின் இருப்பு விவரங்களை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மத்திய அரசின் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பாசுமதி, பிரீமியம் பாசுமதி அல்லாத அரிசி, சாதாரண அரிசி, புழுங்கல் அரிசி, உடைந்த அரிசி, நெல் என ஆறு வகைகளில் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். பதிவு செய்யாதவர்கள், இருப்பு வரம்பை மீறுபவர்கள் ஆகியோர் மீது அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்கள் தேவைக்கேற்ப அரிசி, நெல் இருப்புக்கு உச்சவரம்பு விதிக்கலாம். இந்த உத்தரவு 2027 ஜனவரி 31 வரை அமலில் இருக்கும்.

இந்திய போர்க்கப்பல் திரிசூல், கிரீஸ் பயணத்தை நிறைவு செய்தது

சென்னை – 7 நவம்பர், 2026 இந்தியக் கடற்படையின் ‘ஐஎன்எஸ் திரிசூல்’ போர்க்கப்பல், கிரீஸ் நாட்டின் சௌதா விரிகுடா துறைமுகப் பயணத்தை நவம்பர் 3-ம் தேதி நிறைவு செய்தது.

இந்தப் பயணத்தின்போது, கிரீஸ் கடற்படை உயர் அதிகாரிகள், நேட்டோ கடல்சார் பயிற்சி மையம், அமெரிக்கக் கடற்படைப் பிரிவு அதிகாரிகள் ஆகியோருடன் இந்தியக் கப்பல் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். இரு நாட்டு கடற்படை வீரர்களும் கப்பல்களைப் பார்வையிட்டு, தொழில்நுட்பத் திறன்கள், செயல்பாடுகள் போன்றவை குறித்து அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கிரீஸ் நாட்டிற்கான இந்தியத் தூதர் ரவி சங்கர், போர்க்கப்பலைப் பார்வையிட்டு அதன் போர் திறன்கள் குறித்து கேட்டறிந்தார். மேலும், கப்பலில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சியையும் அவர் பார்வையிட்டார்.

துறைமுகத்திலிருந்து புறப்பட்டபின், கிரீஸ் கடற்படையின் ‘எச்எஸ் லிம்னோஸ்’ போர்க்கப்பலுடன் இணைந்து கடல்சார் பயிற்சியில் ஐஎன்எஸ் திரிசூல் ஈடுபட்டது. இதில் கப்பலின் இயக்கம், தகவல் தொடர்பு, ஹெலிகாப்டர் தரையிறக்கம் உள்ளிட்ட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பயணம் இந்தியா-கிரீஸ் நாடுகளுக்கு இடையிலான கடல்சார் ஒத்துழைப்பையும், இரு நாட்டு கடற்படைகளின் செயல்பாட்டுத் திறனையும் மேம்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்தகட்டப் பணிக்காக ஐஎன்எஸ் திரிசூல் புறப்பட்டது.

நாடு முழுவதும் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பிரச்சாரம் தொடக்கம்

சென்னை – 7 நவம்பர், 2026 நாடு முழுவதும் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பிரச்சாரம் தொடக்கம்: முதல் ஐந்து நாட்களில் 40 லட்சம் சான்றிதழ்கள் உருவாக்கி சாதனை.

மத்திய பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு & ஓய்வூதியத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் ஐந்தாவது டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டம் தொடங்கப்பட்ட முதல் ஐந்து நாட்களில் சுமார் 40 லட்சம் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ்கள் உருவாக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. முதியோர் எளிதில் சான்றிதழ் பெறும் வகையில் முக அடையாள அங்கீகாரத் தொழில்நுட்பப் பயன்பாடு கடந்த ஆண்டை விட 80 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், முதியோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த பிரச்சாரம் ஒரு மக்கள் இயக்கமாக மாறி உள்ளதாகத் தெரிவித்தார். ஓய்வூதியதாரர்களின் அனுபவமும் ஆற்றலும் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை அடைவதற்கு மிகவும் அவசியமானதாகும் என்று அவர் குறிப்பிட்டார். முதியோர்கள் வங்கிகளுக்கோ அலுவலகங்களுக்கோ செல்லாமல் தங்களது கைப்பேசி மூலமாகவே முக அடையாள அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாழ்நாள் சான்றிதழை எளிதாகப் பெற முடியும்.

மத்திய ஓய்வூதியத்துறை செயலாளர் நிவேதிதா சுக்லா வர்மா மற்றும் பல்வேறு துறைகளின் உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்த இயக்கத்தின் கீழ், முதியோர்கள், தொலைதூரப் பகுதிகளில் வசிப்போரின் வசதிக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படுவதுடன், நேரில் வர இயலாத முதியோர்களின் இல்லங்களுக்கே சென்று சேவை வழங்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆயுஷ்மான் பாரத் திட்ட செயலாக்க மேம்பாடு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுடன் தேசிய சுகாதார ஆணையம் ஆய்வு

சென்னை – 7 நவம்பர், 2026 ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்த தேசிய அளவிலான இரண்டு நாள் ஆய்வுக் கூட்டம் கொல்கத்தாவில் நடைபெற்றது. மத்திய சுகாதார அமைச்சகத்தின் தேசிய சுகாதார ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்தில் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். பயனாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், டிஜிட்டல் சுகாதார ஒருங்கிணைப்பை விரைவுபடுத்துதல் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய தேசிய சுகாதார ஆணையத்தின் தலைமைச் செயலதிகாரி சுனில் குமார் பர்ன்வால், சுகாதாரத்துறையில் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும் மக்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்றார். தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்தி திட்டங்களின் செயலாக்கத் திறனை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சுகாதார சேவைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், போலி உரிமை கோரல்களைத் தடுத்தல், டிஜிட்டல் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

Oasis Grace
Engineering Projects Pvt Ltd

Build Your Future With Us

25+ Locations
450+ Employees
500+ Projects
20+ Years of Excellence

What We Do
- Project Management
- Residential Construction
- Commercial Construction
- Industrial & Factory Construction
- Structural Design
- Architectural Design
- PEB and HVAC Works

In 2013 Oasis Grace extended its operations to India with a goal of bringing international construction practices to India.

RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — Sr Eye Surgeon — 9444 288784
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salins R — MBBS MD — General Physician — 87780 87742
Dr Praveena E — MBBS MS (ENT) — Sr ENT Surgeon — 9944 100443

சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஹூக்கா பார்களில் சுகாதாரத் துறையினருடன் இணைந்து காவல்துறையினர் தீடீர் சோதனை– விதிமீறல்கள் தொடர்பாக நடவடிக்கை.



சென்னை – 7 நவம்பர், 2026 சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ் அவர்கள் உத்தரவின்பேரில், காவல் துணை ஆணையாளர்கள் மேற்பார்வையில் நேற்று (05.11.2026), சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட தேனாம்பேட்டை, வேப்பேரி, நுங்கம்பாக்கம், எழும்பூர், அண்ணாசாலை, மயிலாப்பூர் மற்றும் இராயப்பேட்டை பகுதிகளில் செயல்பட்டு வந்த 14 ஹூக்கா பார் (Hookah Bar) மையங்களில், சென்னை பெருநகர காவல்துறையினர், சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் இணைந்து தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப்பொருட்களை ஏதாவது பயன்படுத்தபடுகிறதா என திடீர் சோதனைகள் மேற்கொண்டனர்.

இந்தச்சோதனையின் போது, ஹூக்கா பார் மையங்கள் உரிய அனுமதி பெற்று இயங்குகின்றதா, அரசின் விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்தும், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் ஏதும் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது விதிமீறல்கள் நடைபெற்று இருக்கலாம் என்று சந்தேகத்தின் அடிப்படையில் 13 ஹூக்கா பார் (Hookah Bar) மையங்களில், சம்பந்தப்பட்டவர்கள் மீது 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து ஹூக்கா புகைக்க பயன்படுத்தப்படும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்படுகிறது.

பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்களின் உடல் நலத்தை பாதிக்கும் தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள் மற்றும் போதைப்பொருட்களை பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. ஹூக்கா பார்களில் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தினால் காவல் துறை, சுகாதார துறையினருடன் இணைந்து இது போன்ற தீடீர் சோதனைகள் மேற்கொண்டு சட்டவிரோதமாக செயல்படும் ஹூக்கா பார்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை பெருநகர காவல்துறை சார்பாக எச்சரிக்கப்படுகிறது.

ஆதித்யா பிர்லா கேபிடல் நிதியாண்டு 27 இன் இரண்டாம் காலாண்டு முடிவுகள்

சென்னை – 7 நவம்பர், 2026 ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனம் (“The Company”) செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனது நிதி ரீதியான முடிவுகளை அறிவித்தது.

ஒருங்கிணைந்த வருவாய்1 நிதியாண்டு 27 இன் முதலாம் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 31% வளர்ந்து ₹ 16,545 கோடியாக இருந்தது. ஒருங்கிணைந்த வரிக்குப் பிந்தைய லாபம் நிதியாண்டு 27 இன் முதலாம் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 38% வளர்ந்து ₹ 1,288 கோடியாக இருந்தது. ஒட்டுமொத்த கடன் வழங்கல் AUM (NBFC மற்றும் HFC) ஆண்டுக்கு ஆண்டு 32% மற்றும் தொடர்ச்சியாக 7% வளர்ந்து, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி ₹ 2,33,930 கோடியாக இருந்தது.

மொத்த AUM (AMC, ஆயுள் காப்பீடு மற்றும் சுகாதார காப்பீடு) ஆண்டுக்கு ஆண்டு 2.2 மடங்கு அதிகரித்து, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி ₹ 12,33,619 கோடியாக இருந்தது. ஆயுள் காப்பீட்டின் தனிநபர் முதல் ஆண்டு பிரீமியம் நிதியாண்டு 27 இன் முதல் அரையாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 25% வளர்ந்து ₹ 2,342 கோடியாக இருந்தது, மேலும் சுகாதார காப்பீட்டின் மொத்த எழுதப்பட்ட பிரீமியம் நிதியாண்டு 27 இன் முதல் அரையாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 48% வளர்ந்து ₹ 4,543 கோடியாக இருந்தது.

முக்கிய வணிகச் சிறப்பம்சங்கள்:

NBFC வணிகம் –நிதியாண்டு 27 இன் இரண்டாம் காலாண்டு கடன் வழங்கல் ஆண்டுக்கு ஆண்டு 12% மற்றும் தொடர்ச்சியாக 17% வளர்ந்து ₹ 24,708 கோடியாக இருந்தது

AUM ஆண்டுக்கு ஆண்டு 26% மற்றும் தொடர்ச்சியாக 5% வளர்ந்து ₹ 1,76,557 கோடியாக இருந்தது

வரிக்கு முந்தைய லாபம் ஆண்டுக்கு ஆண்டு 41% மற்றும் தொடர்ச்சியாக 11% வளர்ந்து ₹ 1,352 கோடியாக இருந்தது

சொத்துகளின் மீதான வருமானம் ஆண்டுக்கு ஆண்டு 25 bps மற்றும் தொடர்ச்சியாக 6 bps அதிகரித்து 2.45% ஆக இருந்தது

மொத்த நிலை 2 மற்றும் 3 விகிதம் ஆண்டுக்கு ஆண்டு 72 bps மற்றும் தொடர்ச்சியாக 12 bps மேம்பட்டு 2.31% ஆக இருந்தது

வீட்டு வசதி நிதி – நிதியாண்டு 27 இன் இரண்டாம் காலாண்டு கடன் வழங்கல் ஆண்டுக்கு ஆண்டு 55% மற்றும் தொடர்ச்சியாக 19% வளர்ந்து ₹ 8,957 கோடியாக இருந்தது

AUM ஆண்டுக்கு ஆண்டு 50% மற்றும் தொடர்ச்சியாக 11% வளர்ந்து ₹ 57,373 கோடியாக இருந்தது.

வரிக்கு முந்தைய லாபம் ஆண்டுக்கு ஆண்டு 73% மற்றும் தொடர்ச்சியாக 12% வளர்ந்து ₹ 335 கோடியாக இருந்தது

சொத்துகளின் மீதான வருமானம் 2.12% ஆக இருந்தது.

மொத்த நிலை 2 மற்றும் 3 விகிதம் ஆண்டுக்கு ஆண்டு 45 bps மற்றும் தொடர்ச்சியாக 13 bps மேம்பட்டு 0.65% ஆக இருந்தது.

AMC வணிகம் – நிதியாண்டு 27 இன் இரண்டாம் காலாண்டு பரஸ்பர நிதி காலாண்டு சராசரி நிர்வாகத்தின் கீழ் சொத்துகள் ஆண்டுக்கு ஆண்டு 4% வளர்ந்து ₹ 4,41,787 கோடியாக இருந்தது

ஈக்விட்டி QAAUM ஆண்டுக்கு ஆண்டு 9% வளர்ந்து ₹ 2,09,230 கோடியாக இருந்தது

தனிநபர் மாதாந்திர சராசரி நிர்வாகத்தின் கீழ் சொத்துகள் ஆண்டுக்கு ஆண்டு 5% வளர்ந்து ₹ 2,17,740 கோடியாக இருந்தது

வரிக்குப் பிந்தைய லாபம் ₹ 221 கோடியாக இருந்தது

ஆயுள் காப்பீட்டு வணிகம் – நிதியாண்டு 27 இன் முதல் அரையாண்டு

தனிநபர் முதல் ஆண்டு பிரீமியம் (FYP) ஆண்டுக்கு ஆண்டு 25% வளர்ந்து ₹ 2,342 கோடியாக இருந்தது

குழு புதிய வணிக பிரீமியம் ஆண்டுக்கு ஆண்டு 90% அதிகரித்து ₹ 4,232 கோடியாக இருந்தது.

புதுப்பித்தல் பிரீமியம் ஆண்டுக்கு ஆண்டு 20% வளர்ந்து ₹ 5,578 கோடியாக இருந்தது.

புதிய வணிகத்தின் நிகர மதிப்பு (VNB) வரம்பு ஆண்டுக்கு ஆண்டு 447 bps அதிகரித்து 16.1% ஆக இருந்தது.

முழுமையான நிகர VNB ஆண்டுக்கு ஆண்டு 78% வளர்ந்து ₹ 424 கோடியாக இருந்தது.

சுகாதார காப்பீட்டு வணிகம் – நிதியாண்டு 27 இன் முதல் அரையாண்டு

மொத்த எழுதப்பட்ட பிரீமியம் ஆண்டுக்கு ஆண்டு 48% வளர்ந்து ₹ 4,543 கோடியாக இருந்தது.

தனிப்பட்ட சுகாதார காப்பீட்டாளர் சந்தைப் பங்கு ஆண்டுக்கு ஆண்டு 70 bps அதிகரித்து 14.2% ஆக இருந்தது.

ஒருங்கிணைந்த விகிதம் 107% ஆக இருந்தது.

காங்கிரஸின் தொடர் தேர்தல் தோல்விகளைச் சுட்டிக்காட்டி அமித் ஷா விமர்சனம்

சென்னை – 7 நவம்பர், 2026 ஹரியானா மாநிலம் கர்னாலில் நடைபெற்ற ‘ஜனநாயகத்தைக் காப்போம், அராஜகத்தை அகற்றுவோம்’ என்ற பேரணியின் நிறைவுக் கட்டத்தில், மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் கட்சியையும் ராகுல் காந்தியையும் கடுமையாக விமர்சித்தார். அக்கட்சியின் தலைமை, தேர்தல் செயல்பாடுகள் மற்றும் ஜனநாயக அமைப்புகளை அணுகும் விதம் குறித்துப் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பலம் தொடர்ந்து குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய அமித் ஷா, 2007-ஆம் ஆண்டு ராகுல் காந்தி காங்கிரஸ் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றபோது அக்கட்சிக்கு சுமார் 1,200 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்ததாகக் குறிப்பிட்டார். அவர் துணைத் தலைவரானபோது இந்த எண்ணிக்கை 900 ஆகவும், கட்சித் தலைவரானபோது 700 ஆகவும் குறைந்தது. 2022-ஆம் ஆண்டு பாரத் ஜோடோ யாத்திரையின்போது இந்த எண்ணிக்கை சுமார் 600 ஆக மேலும் சரிந்ததாகத் தெரிவித்தார். ஹரியானா, மகாராஷ்டிரா, டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ் சந்தித்த தொடர் தேர்தல் தோல்விகளும் அதன் அரசியல் செல்வாக்கு சரிந்து வருவதையே காட்டுவதாகக் கூறினார்.

நாடாளுமன்றத்தின் மாண்பைக் காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அமித் ஷா, அது விவாதங்களுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் உரிய இடமே தவிர, இடையூறுகளையும் வலிமை காட்டும் செயல்களையும் அரங்கேற்றும் இடமல்ல என்றார். தேர்தலில் வெற்றி பெறும்போது மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் காங்கிரஸ், தோல்வியடையும்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் தேர்தல் ஆணையத்தையும் குறை கூறுவதாக விமர்சித்தார்.

ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் விவாதிக்க முன்வர வேண்டும் என்றும், எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதிக்க பாஜக தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், வாக்காளர் பட்டியல்களைச் சீரமைக்கும் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணி (SIR), ஜனநாயகத்தை வலுப்படுத்துமே தவிர, தகுதியான வாக்காளர்களின் உரிமைகளைப் பறிக்காது என்றும் விளக்கினார்.



வாக்காளர் உரிமைகள் குறித்த கவலைகளை முன்வைத்து ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்கவே காங்கிரஸ் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார். ஹரியானா முழுவதும் வீடு வீடாகச் சென்று மக்களிடம் உண்மை நிலையை எடுத்துரைக்குமாறு பாஜக தொண்டர்களைக் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்தவும், எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு மக்கள் மத்தியில் நேரடியாகப் பதிலளிக்கவும் பாஜக உறுதிபூண்டுள்ளதாக இந்தப் பேரணி எடுத்துரைத்தது.

சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் (Sigma Advanced Systems) நிறுவனம், இரண்டாம் காலாண்டில் ரூ. 417 கோடி வருவாயையும், ரூ. 48.60 கோடி நிகர லாபத்தையும் (PAT) ஈட்டியுள்ளது

சென்னை – 7 நவம்பர், 2026 சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனம், 2026 செப்டம்பர் 30-டன் முடிவடைந்த 2026-27 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முடிவுகளை இன்று அறிவித்துள்ளது. விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் நிறுவனம் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதையும், இதற்கு மூலோபாய கையகப்படுத்துதல்கள், புதிய ஆர்டர்கள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளின் விரிவாக்கம் ஆகியவை வலுசேர்த்துள்ளதையும் இந்த முடிவுகள் காட்டுகின்றன.

ஜூலை 14, 2026 அன்று அறிவிக்கப்பட்டபடி, Bromford Precision Solutions Limited நிறுவனத்தின் 100% பங்குகளை Sigma கையகப்படுத்தியது. இதன் நிறுவன மதிப்பு (Enterprise Value) சுமார் 11.89 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் (சுமார் ரூ. 153 கோடி) ஆகும். ஐக்கிய இராச்சியத்தின் லெய்செஸ்டரைச் (Leicester) சேர்ந்த Bromford நிறுவனம், வான்வெளி இயந்திரங்களுக்கான (aero-engine) மிகத்துல்லியமான, சிக்கலான வளையங்கள் (rings) மற்றும் பிற இயந்திரக் கட்டமைப்புகளைத் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது. இந்தக் கையகப்படுத்தல், Rolls-Royce நிறுவனத்தின் விநியோகச் சங்கிலியில் Sigma-வின் நிலையை வலுப்படுத்துகிறது. கையகப்படுத்தப்பட்ட சில வாரங்களிலேயே, Bromford நிறுவனம் Rolls-Royce உடன் சுமார் 125 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் (சுமார் ரூ. 1,600 கோடி) மதிப்பிலான நீண்டகால ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது. ஏப்ரல் 2026-ல் கையெழுத்திடப்பட்ட 300 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் (சுமார் ரூ. 3,800 கோடி) மதிப்பிலான ஒப்பந்தத்துடன் சேர்த்து, தற்போது Rolls-Royce உடனான Sigma-வின் நீண்டகால ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பு சுமார் 425 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளை (சுமார் ரூ. 5,400 கோடி) எட்டியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள தனது செயல்பாடுகளிலிருந்து பணிகளை வெற்றிகரமாக மாற்றியதைத் தொடர்ந்து, Sri City-யில் உள்ள ஆலை தனது செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது. இந்த ஆலை, வான்வெளித் துறைக்கான (aerospace) உதிரிபாகங்களின் முதல் தொகுதியைத் தயாரித்து, Nasmyth நிறுவனத்தின் ஐக்கிய இராச்சிய வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்துள்ளது. இது நிறுவனத்தின் இந்தியா-ஐக்கிய இராச்சியம் இடையிலான உற்பத்தி ஒருங்கிணைப்பு உத்தியில் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

சிக்னலை மதியுங்கள் - சாலை விதிகளைப் பின்பற்றுங்கள்.

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

ஹலோ மிரர் மெட்ராஸ் - பாதுகாப்பாகச் செல்லுங்கள்

MY ARK CENTRE
for Intellectual Disability
HOPES Trust
மாற்றம் என்பது சொல் அல்ல செயல்
அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி
ரெட்டணை ரோடு,
ரயில்வே கேட் அருகில்,
தென்பசியார், திண்டிவனம்-604302
9790439935

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

ஜைனம் இன் சம்வத் 2083 கண்ணோட்டம், தீபாவளி சுபமுகூர்த்த பங்குப் பரிந்துரைகளுக்காக வங்கி, விருந்தோம்பல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறைகள் முழுவதிலும் ஐந்து பங்குகளை அடையாளம் காட்டுகிறது

சென்னை – 7 நவம்பர், 2026 ஒரு முழுமையான நிதிச் சேவை நிறுவனமான ஜைனம், சம்வத் 2082 காலகட்டத்தில் இந்திய பங்குச் சந்தையின் செயல்திறனை மதிப்பாய்வு செய்து, வரவிருக்கும் ஆண்டிற்கான ஐந்து பங்குகளை அடையாளம் காண்கின்ற தனது வருடாந்திர தீபாவளி முஹூரத் பிக்ஸ் 2026 - சம்வத் 2083 ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஏப்ரல்–ஜூன் 2026 காலாண்டில் தொடர்ந்த பொருளாதார வேகத்தை பிரதிபலிக்கின்ற 7.8% உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை இந்தியா பதிவு செய்தது. சம்வத் 2082 காலத்தில், பங்குச் சந்தை செயல்திறன் சந்தை மூலதனப் பிரிவுகளுக்கு இடையே வேறுபட்டிருந்தது; அக்டோபர் 21, 2025 அன்று நடைபெற்ற முஹூரத் வர்த்தக அமர்வுக்கும் அக்டோபர் 30, 2026 க்கும் இடையில் நிஃப்டி 50 10.88% சரிந்தது, சென்செக்ஸ் 11.81% வீழ்ச்சியடைந்தது.

நிஃப்டி மிட்கேப் 150 மற்றும் நிஃப்டி ஸ்மால்கேப் குறியீடுகள் முறையே 4.21% மற்றும் 3.02% சரிந்தன. இந்த அறிக்கை இந்த நகர்வுகளை, மாறிவரும் மதிப்பீடுகள், உள்நாட்டு முதலீட்டுச் செயல்பாடு மற்றும் இந்திய மூலதனச் சந்தைகளைப் பாதிக்கும் உலகளாவிய வளர்ச்சிகள் ஆகியவற்றுடன் சேர்த்து ஆராய்கிறது.

இத்தகைய சவால்கள் இருந்தபோதிலும், நிதியாண்டு 2027 முதல் காலாண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8% வளர்ந்ததுடன் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மீள்திறனுடன் தொடர்ந்தது. இந்த அறிக்கை தொடர்ச்சியான உள்நாட்டு முதலீட்டாளர் பங்கேற்பையும் எடுத்துக்காட்டுகிறது; செப்டம்பர் 2026 இல் மாதாந்திர SIP வரவுகள் ₹32,490 கோடியை எட்டி சாதனை படைத்தன, அதே நேரத்தில் இந்த ஆண்டில் FPI பங்கு விற்பனை ₹3 லட்சம் கோடியைத் தாண்டியது.

சம்வத் 2083-க்காக, ஜைனம் இன் ஆய்வுக் குழு அடிப்படை மற்றும் தொழில்நுட்ப பகுப்பாய்வின் கலவையின் மூலம் தி இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் (IHCL), எச்டிஎஃப்சி பேங்க், கோட்டக் மஹிந்திரா பேங்க், டெக் மஹிந்திரா மற்றும் பாரதி ஹெக்சாகாம் ஆகிய ஐந்து பங்குகளை அடையாளம் கண்டுள்ளது. இந்தத் தேர்வுகள் விருந்தோம்பல், தனியார் துறை வங்கியியல், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் பரவியுள்ளன. இந்த ஆய்வு ஒவ்வொரு நிறுவனத்தின் வணிக செயல்திறன், நிதிநிலை, மதிப்பீடுகள், வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் முக்கிய அபாயங்களை மதிப்பிடுகிறது.

ஜைனம் இன் ஆய்வுத் தலைவர் – ரீடைல் புரோக்கிங் (AVP) ஹிமான்ஷு குப்தா கூறும்பொழுது, "புவிசார் அரசியல் வளர்ச்சிகள் மற்றும் கச்சா எண்ணெய் விலைகள் முதல் நாணய மதிப்பு மாற்றங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் வரத்து வரை பல வெளிப்புற காரணிகளால் சந்தை செயல்திறன் வடிவமைக்கப்பட்ட ஒரு ஆண்டாக சம்வத் 2082 இருந்தது. அதே நேரத்தில், உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான SIP பங்கேற்பு ஆகியவை இந்திய சந்தையின் முக்கிய அம்சங்களாக இருந்தன. நாம் சம்வத் 2083-இல் நுழையும் இந்த வேளையில், முதலீட்டாளர்கள் வணிகங்களை அவற்றின் வருவாய் செயல்திறன், மதிப்பீடுகள், வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அபாயங்கள் ஆகியவற்றின் மூலம் மதிப்பிட வேண்டும். பல்வேறு துறைகளில் வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு அடிப்படை ஆய்வு மற்றும் தொழில்நுட்ப பகுப்பாய்வை எங்களின் ஐந்து தேர்வுகள் ஒன்றிணைக்கின்றன. இந்த பங்குகளை மதிப்பிடும்போது முதலீட்டாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய நிலைகள் மற்றும் அபாய அளவுருக்களையும் இந்த அறிக்கை விவரிக்கிறது."என்று கூறினார்.

சம்வத் 2083-இல், இந்தியாவின் பொருளாதார மற்றும் கொள்கை சூழல், உலகளாவிய வட்டி விகிதங்கள், புவிசார் அரசியல் முன்னேற்றங்கள், பண்டங்கள், நாணய மதிப்பு மாற்றங்கள், நிறுவன முதலீட்டு ஓட்டங்கள், சந்தை மதிப்பீடுகள் மற்றும் முக்கிய குறியீடுகளில் உள்ள தொழில்நுட்ப போக்குகள் ஆகியவை அடங்கிய சந்தை போக்கை பாதிக்கக்கூடிய காரணிகளைப் பற்றிய விரிவான மதிப்பீட்டை இந்த அறிக்கை வழங்குகிறது.

வீட்ல Couple...ஆபிஸ்ல Strangers!



சென்னை – 7 நவம்பர், 2026 வீட்ல Couple...ஆபிஸ்ல Strangers! ஜியோஹாட்ஸ்டாரின் புதிய அலுவலக நகைச்சுவைத் தொடர் 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' நவம்பர் 18 ஆம் தேதி முதல் ப்ரீமியர் ஆகிறது! நடிகர்கள் பிரதீப் ஆண்டனி, ஸ்மேஹா மணிமேகலை, சனம் ஷெட்டி மற்றும் மகிழ் திருமேனி ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள இந்தப் புதிய தமிழ் தொடர், ஒவ்வொரு புதன்கிழமையும் நான்கு எபிசோடுகளுடன் வெளியாகிறது. திருமண வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கும் கணவன், மனைவி, வாரத்தில் ஐந்து நாட்கள் அலுவலகத்தில் ஒருவருக்கொருவர் தெரியாத அந்நியர்களைப் போல நடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் என்னவாகும்? இந்தச் சுவாரஸ்யமான கேள்விக்கு நகைச்சுவை கலந்த பதிலுடன் ஜியோஹாட்ஸ்டார் தனது புதிய தமிழ் ஒரிஜினல் தொடரான 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடரை அறிமுகப்படுத்துகிறது. இந்தத் தொடர் நவம்பர் 18 ஆம் தேதி முதல் வெளியாகிறது. ஒவ்வொரு புதன்கிழமையும் நான்கு புதிய எபிசோடுகள் வெளியாகும். கார்ப்பரேட் அலுவலகப் பின்னணியில் உருவாகியுள்ள 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடர், குடும்பச் செலவுகளைச் சமாளிக்கப் போராடும் இளம் தம்பதியான அறிவு மற்றும் ஐஸ்வர்யாவைச் சுற்றி நகர்கிறது. இருவருக்கும் ஒரே ஐடி நிறுவனத்தில் வேலை கிடைக்கிறது. ஆனால், அந்த நிறுவனத்தின் கடுமையான விதிமுறையின்படி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகப் பணிபுரியக் கூடாது. இதனால் தங்களது வேலையையும் பொருளாதார நிலையையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில், தங்களது திருமண உறவை மறைத்து, அலுவலகத்தில் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் போல நடந்துகொள்ள இருவரும் முடிவு செய்கின்றனர். இதற்குப் பிறகு ஆபிஸ் மீட்டிங்ஸ், காபி பிரேக்ஸ், சக ஊழியர்களுடனான உரையாடல்கள் என ஒவ்வொரு தருணத்திலும் அவர்களது ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்ற பதற்றம் உருவாகிறது. கண்டிப்பான மேலாளரைச் சமாளிப்பது முதல் ஆர்வத்துடன் கேள்வி கேட்கும் சக ஊழியர்களை எதிர்கொள்வது வரை, தங்களது திருமண வாழ்க்கையை மறைப்பதற்காகத் தொடர்ந்து புதுப்புது பொய்களைக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நகைச்சுவைக்கு மத்தியில், இன்றைய சூழலில் பணிபுரியும் இளம் தம்பதிகளின் வாழ்க்கைப் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், உறவுச் சிக்கல்கள் மற்றும் கார்ப்பரேட் வாழ்க்கையின் அன்றாட யதார்த்தங்களையும் இந்தத் தொடர் பேசுகிறது. இந்தத் தொடரில் பிரதீப் ஆண்டனி மற்றும் ஸ்மேஹா மணிமேகலை ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களான அறிவு மற்றும் ஐஸ்வர்யாவாக நடித்துள்ளனர். இவர்களுடன் திரைப்படங்களில் நடித்ததன் மூலமும், பிக்பாஸ் தமிழ் சீசன் 4 நிகழ்ச்சியின் மூலமும் பிரபலமான சனம் ஷெட்டி மற்றும் 'தடம்', 'கலகத் தலைவன்', 'விடாமுயற்சி' உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் மகிழ் திருமேனி ஆகியோரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தத் தொடர் குறித்து நடிகர் பிரதீப் ஆண்டனி பகிர்ந்து கொண்டதாவது, "திருமணமானதை அலுவலகத்தில் மறைப்பது சாதாரண விஷயம் இல்லை. அப்படி மறைக்கும்போது என்னவாகும் என்பதை நகைச்சுவை கலந்து காட்ட இருக்கிறது 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடர். ஒரு நல்ல கணவராக இருப்பதற்கும், அலுவலகத்தில் அந்நியரைப் போல நடிப்பதற்கும் இடையில் அறிவு தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பார். ஒவ்வொரு சூழலையும் கட்டுப்படுத்த அவர் முயற்சிக்கும்போதெல்லாம் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். அலுவலக வேலைக்கு செல்பவர்கள் அனைவரும் தங்களை இதில் தொடர்புபடுத்திக் கொள்ள முடியும். இந்தத் தம்பதி தங்களது ரகசியத்தை எப்படிக் காப்பாற்றப் போராடுகிறார்கள் என்பதைப் பார்வையாளர்கள் மிகவும் ரசிப்பார்கள் என்று நம்புகிறேன்" என்றார். நடிகை ஸ்மேஹா மணிமேகலை பகிர்ந்து கொண்டதாவது, "திருமணமானவர்கள் பெரும்பாலும் வீட்டிலும் வெளியிலும் வெவ்வேறு விதமாக நடந்துகொள்வார்கள். ஆனால், அலுவலகத்தில் தங்களது கணவரையே தெரியாது என்று நடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் எப்படி இருக்கும்? ஐஸ்வர்யா தனது உறவு, வேலை மற்றும் எப்போது ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம் என அனைத்தையும் சமாளிக்க வேண்டும். இதில் வரும் சூழல்கள் சிரிப்பை ஏற்படுத்தினாலும், இணைந்து ஒரு வாழ்க்கையை உருவாக்கப் போராடும் இருவரின் உண்மையான கதையும் இதில் இருக்கிறது" என்றார். நடிகை சனம் ஷெட்டி, "திரைத்துறைக்கு வருவதற்கு முன்பு ஐடி துறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கு இருப்பதால், இந்தத் தொடரின் கார்ப்பரேட் பின்னணியையும் அலுவலக வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளையும் உடனடியாக என்னால் தொடர்புபடுத்திக் கொள்ள முடிந்தது. ஆபிஸ் மீட்டிங்ஸ், அரசியல், சக ஊழியர்கள் மற்றும் எதிர்பாராத சூழல்கள் என அனைத்துமே எனக்கு மிகவும் பரிச்சயமானவை. அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் இந்த அனுபவங்களை நகைச்சுவையான சூழல்களாக மாற்றியிருப்பதுதான் 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடரின் சிறப்பு. பார்வையாளர்கள் ரசிப்பதுடன் தங்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய புதுமையான நகைச்சுவைத் தொடர் இது" என்றார். சந்திரபோஸ் கதாபாத்திரத்தில் நடித்துள்ள மகிழ் திருமேனி பகிர்ந்து கொண்டதாவது, "ஒரு சூழலில் இருந்து இயல்பாக உருவாகும் நகைச்சுவை மிகவும் இயல்பாக இருக்கும். தங்களது திருமண வாழ்க்கையைப் பிறரிடமிருந்து மறைக்கப் போராடும் இரண்டு மனிதர்கள் என்ற எளிமையான, அதேசமயம் சுவாரஸ்யமான கதைக்களத்தைக் கொண்டது 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடர். பணியிடச் சூழல், ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான மோதல்கள், தொடர்ந்து ஏற்படும் தவறான புரிதல்கள் என நகைச்சுவைக்கு ஏராளமான வாய்ப்புகள் இதில் உள்ளன. இந்தத் தொடரில் பணியாற்றியது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது" என்றார். அப்துல் கபீஸ் இயக்கத்தில், ஜெகன் பாஸ்கரன் தயாரித்துள்ள 'மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்' தொடர், ஜியோஹாட்ஸ்டாரின் லாங் ரன்னிங் ஷோஸ் வரிசையில் இணைகிறது. மொத்தம் 100 எபிசோடுகளைக் கொண்ட இந்தத் தொடரில், ஒவ்வொரு வாரமும் நான்கு எபிசோடுகள் வெளியாகும். அலுவலக நகைச்சுவை, காதல் மற்றும் கதாபாத்திரங்களின் மாறிவரும் உறவுகள் எனப் பல அம்சங்களுடன் வாரந்தோறும் பார்வையாளர்களுக்கு புதுமையான பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்கவுள்ளது.

திருவொற்றியூர் பகுதியில் முதியவரிடம் வீண் தகராறு செய்து தாக்கிய 3 நபர்கள் கைது.

சென்னை – 7 நவம்பர், 2026 சென்னை, திருவொற்றியூர், கணக்கர் தெருவைச்சேர்ந்த ஜெயகுமார், வ/67, த/பெ.கண்ணாயிரம் என்பவர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், இவர் கடந்த 04.11.2026 தேரடி பஸ் ஸ்டாப் அருகே சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பின்னால் ஆட்டோவில் வந்த நபர் ஒருவர் வேண்டுமென்றே மேற்படி முதியவர் ஜெயகுமாரை காலால் எட்டி உதைத்ததால் ஜெயகுமார் நிலைதடுமாறி நின்றதாகவும், பின்னர் அந்த ஆட்டோ ஓட்டுநர் அருகில் உள்ள மருத்துவமனை அருகே ஆட்களை கீழே இறக்கி கொண்டிருந்ததை பார்த்த ஜெயகுமார், அங்கு சென்று ஏன் என்னை காலால் எட்டி உதைத்தீர்கள் என கேட்டபோது ஏற்பட்ட வாய் தகராறு முற்றியதில் ஆட்டோவில் இருந்த 3 நபர்கள் மேற்படி ஜெயகுமாரை அவதூறாக பேசி கையால் தாக்கி கீழே தள்ளி விட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றனர். தாக்குதலில் காயமடைந்த ஜெயகுமார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிக்சை பெற்று தன்னை தாக்கிய 3 நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கொடுத்த புகாரின் பேரில் H-8 திருவொற்றியூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.



H-8 திருவொற்றியூர் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளியான கார்த்திக் (எ) டேப் கார்த்திக் மீது ஏற்கனவே 6 குற்ற வழக்குகள் உள்ளது.

சென்னை 2.லோகேஷ், வ/24, சுனாமி குடியிருப்பு, எர்ணாவூர், சென்னை 3.கார்த்திக் (எ) டேப் கார்த்திக், வ/28, சுனாமி குடியிருப்பு, எர்ணாவூர், சென்னை ஆகிய மூவரை நேற்று (05.11.2026) கைது செய்தனர்.

H-8 திருவொற்றியூர் காவல் நிலைய

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (05.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

கோயம்பேடு பகுதியில் பெண்ணை அவதூறான வார்த்தைகளால் பேசி தொந்தரவு செய்த நபர் கைது.

சென்னை – 7 நவம்பர், 2026 சென்னை, நெற்குன்றம் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வரும் 48 வயது பெண் ஒருவர் அவரது வீட்டின் அருகே மளிகை கடை வைத்து நடத்தி வருவதாகவும், இவரது வீட்டிற்கு அருகே வசித்து வரும் சீனிவாசன் (எ) சீனு என்பவர், கடந்த இரண்டு வருடங்களாக அப்பெண் அவரது வீட்டின் அருகே நடந்து செல்லும் போது அவதூறான வார்த்தைகளால் பேசி வந்துள்ளார், இந்நிலையில் அப்பெண் கடந்த 04.11.2026 அன்று மதியம் அவரது வீட்டின் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த சீனிவாசன் அப்பெண்ணை பார்த்து அவதூறான வார்த்தைகளால் பேசியுள்ளார், அப்பெண் சீனிவாசனிடம் "ஏன் என்னை அடிக்கடி அவதூறான வார்த்தைகளால் பேசுகிறீர்கள்", என்று கேட்டதற்கு, அப்படிதான் பேசுவேன் எனக் கூறியுள்ளார். தன்னை அவதூறாக பேசி, அருவருக்கதக்க வகையில் நடந்து கொண்ட சீனிவாசன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் K-10 கோயம்பேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS Act) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (TNPHW Act) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

K-10 கோயம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சீனிவாசன் (எ) சீனு, வ/51, லட்சுமணன் தெரு, புவனேஸ்வரி நகர், நெற்குன்றம், சென்னை என்பவரை நேற்று (05.11.2026) அன்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சீனிவாசன் (எ) சீனு என்பவர் விசாரணைக்குப் பின்னர் நேற்று (05.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

கொடுங்கையூர் பகுதியில் வீட்டில் தங்க நகைகளை திருடிய வழக்கில் மேலும் ஒருவர் கைது.



சென்னை – 7 நவம்பர், 2026 சென்னை, கொடுங்கையூர், ஆர்.வி நகர், 7 வது தெருவில் சுந்தரி, பெ/வ/46, க/பெ.சக்திவேல் (லேட்) என்பவர் வசித்து வருகிறார். சுந்தரியின் அக்கா ஸ்ரீதேவி என்பவர் கடந்த 2025ம் ஆண்டு இறந்து விட்டதால், ஸ்ரீதேவியின் மகள் பெமினா என்பவர் மேற்படி சித்தி சுந்தரி வீட்டில் தங்கியிருந்து வருவதாகவும், கடந்த 20.06.2026 அன்று சுந்தரி சுமார் 19 சவரன் தங்க நகைகளை பீரோவில் வைத்து விட்டு வெளியே சென்று, சிறிது நேரம் கழித்து வந்து பார்த்த போது மேற்படி தங்க நகைகளை காணவில்லை எனவும், மேற்படி தங்க நகைகளை தனது வீட்டில் தங்கியிருந்து வரும் அக்கா மகள் பெமினா என்பவர் திருடியிருக்கலாம் எனவும் அவர் மீது சந்தேகம் இருப்பதாகவும், தகுந்த நடவடிக்கை எடுத்து தங்க நகைகளை மீட்டு தருமாறு சுந்தரி என்பவர் P-6 கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, மேற்படி வழக்கில் தொடர்புடைய எதிரி பெமினாவின் தோழி ஸ்ருதிகா, வ/23, பெரம்பூர், சென்னை என்பவரை கடந்த 26.10.2026 அன்று கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இவ்வழக்கில் மொத்தம் 5 சவரன் தங்க நகைகள் மீட்கப்பட்டு, தலைமறைவான குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர். . P-6 கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதல் வேட்டை நடத்தி மேற்படி வழக்கில் ஸ்ருதிகாவிற்கு தங்க நகைகளை அடகு வைத்து உதவிய ராகுல், வ/23, ஓட்டேரி, சென்னை என்பவரை 04.11.2026 அன்று கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி ராகுல் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் #CelebratingAcceptance தீபாவளி குறும்படம், பணியிடங்களை அனைவரையும் உள்ளடக்கியதாக மாற்றும் அமைதியான மரியாதையைக் கொண்டாடுகிறது

சென்னை – 7 நவம்பர், 2026 இந்த தீபாவளியில், கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமம், #CelebratingAcceptance and 'The Roommate' மூலம் பரவலாக அறியப்பட்ட ஏற்றுக்கொள்ளுதலின் தீபத்தை நவீன அலுவலகத்தின் ஹால்களுக்குள் எடுத்துச் செல்கிறது; இந்தத் தொடர், சமூக உள்ளடக்குதலைப் பற்றிய உரையாடலை குடும்ப வீட்டிலிருந்து பணியிடத்திற்கு நகர்த்தும் ஒரு குறும் படத்துடன் மீண்டும் வருகிறது. தீபாவளி ஏற்பாடுகளால் சுறுசுறுப்பாக இருக்கும் ஒரு அலுவலகத்தைப் பின்னணியாகக் கொண்ட இப்படம், ஏற்றுக்கொள்ளுதல் என்பது எப்போதும் ஒரு பிரகடனத்தால் வெளிப்பட வேண்டியதில்லை என்பதைக் காட்டுகிறது; சில நேரங்களில், அது தனிப்பட்ட கதையை ஒருவர் தன் சொந்த விருப்பப்படி பகிர்ந்துகொள்வதற்கான சுதந்திரமும், அவ்வாறு செய்யும்போது அன்பான வரவேற்பு கிடைக்கும் என்ற உறுதியுமே ஆகும்.

இந்த கதை ஒரு புதிய பணியிடத்தில் அயான் என்பவரின் முதல் நாளில் தொடங்குகிறது. பதற்றமாகவும் ஆனால் நம்பிக்கையுடனும் இருக்கும் அவனை, பிரியங்காவும் அவளது குழுவினரும் வரவேற்கின்றனர். அவர்கள் அவனை லாந்தர்கள், அலங்கார விளக்குகள் மற்றும் ரங்கோலி நிறைந்த பண்டிகைக் காலக் கொண்டாட்டத்திற்குள் இழுத்துச் செல்கின்றனர். குழுவினர் தீபாவளித் திட்டங்களைப் பரிமாறிக்கொண்டும், அலுவலக விருந்துக்கு அழைத்து வரப்போகும் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிப் பேசிக்கொண்டும் இருக்கும்போது, அயான் பிரியங்காவிடம் அவளுடைய குடும்ப உறுப்பினர்களைப் பற்றிக் கேட்கிறான். அவர் பதிலளிக்கும் முன், ஒரு சக ஊழியர், ஒவ்வொரு ஆண்டும் போலவே இந்த ஆண்டும் அவர் தனது ரூம்மேட் மீராவின் வீட்டில் இருப்பார் என்று சாதாரணமாகக் கருதுகிறார். பிரியங்கா சற்று நிற்கிறார், தன்னைச் சுற்றியுள்ளவர்களைப் பார்க்கிறார், சரியான நேரம் இதுதான் என்று முடிவெடுக்கிறார்."மீரா வெறும் என் அறைத்தோழி மட்டுமல்ல; அவள்... என் துணைவி," 'என்கிறார், பின்னர் அவர்களின் பதிலுக்காகக் காத்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்து நேர்மையான உரையாடல் நடக்கிறது, ஆனால் பிரியங்கா எதிர்பார்த்ததுபோல் அல்ல. 'ஆமாம்... எனக்குத் தெரியும்,' என்கிறார் ஒரு சக ஊழியர் புன்னகையுடன், மற்றவர்களும் கிண்டலாக 'எனக்கும் தெரியும்' மற்றும் 'எனக்கும் தெரியும்' என்று தொடர்கிறார்கள். யாரும் யாரிடமும் எப்போதும் எதுவும் சொல்லவில்லையா என்று அயான் கேட்கும்போது, பதில் சாதாரணமாக இருந்தது: 'சொல்வதற்கு அது எங்கள் கதை அல்ல.' சக ஊழியர்களின் இந்த வார்த்தைகள், ஒருவரை ஒருவர் மதிப்பது குறித்த அமைதியான தத்துவத்தை வெளிப்படுத்தின. மக்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை விளக்க வேண்டிய கட்டாயத்தை உணராதபோது நம்பிக்கை வளர்கிறது, அதனால் பிரியங்கா வெளிப்படையாக சாதாரணமாக இருக்கிறார். 'உண்மையைச் சொல்லப்போனால், இதை உங்களிடம் சொல்ல சரியான நேரத்துக்காகக் காத்திருந்தேன். தீபாவளியை விட சிறந்த நேரம் வேறு என்ன இருக்க முடியும்?' என்கிறார், அவரது சிரிப்பு மீண்டும் வருகிறது. இதையெல்லாம் தனது முதல் நாளிலேயே பார்க்கும் அயான், அந்த தருணத்தின் இயல்பான தன்மையால் பிரமிப்படைகிறான். அவனது துணையான மானவ் அவனது முதல் நாளைப் பற்றிக் கேட்டு குறுஞ்செய்தி அனுப்பும்போது, 'நான் ஏற்கெனவே இந்த இடத்திற்கு உரியவன் போல் உணர்கிறேன்,' என்று அவன் பதிலளிக்கிறான். அயான் தான் யாராக இருக்கிறானோ அதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு குழுவில் சேர்ந்துள்ளான் என்பதை உணர்வதால் ஒரு தருணத்தின் இயல்பான தன்மை ஒரு புதியவருக்கு எவ்வாறு நம்பிக்கையூட்ட முடியும் என்பதை இந்தப் உரையாடல் வெளிப்படுத்துகிறது.

Agency09 ஆல் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு எழுதப்பட்ட இந்தத் திரைப்படம், ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு சக ஊழியரின் கதைக்கும் வாய்ப்பளிக்கும்போது இந்த தீபாவளி இன்னும் பிரகாசமாக இருக்கும் என்ற உணர்வை பார்வையாளர்களுக்கு விட்டுச் செல்கிறது. பிரியங்கா மீராவை அவளது அறைத் தோழியாக மட்டுமல்லாமல், தனது துணையாக விருந்துக்கு அழைப்பதோடு இது நிறைவடைகிறது, மேலும் அவளது சக ஊழியர்கள் இந்தச் செய்தியை அன்பான புன்னகைகளுடன் வரவேற்கின்றனர். அவர்களில் ஒருவர், "நீங்கள் உறவுகளைப் பேணுங்கள்..." என்று கூற, அதற்குத் தொடர்ச்சியாக அயான், "சம்பிரதாயங்கள் தானாகவே வந்து சேரும்" என்று அந்த எண்ணத்தை நிறைவு செய்கிறான்.' நமது கொண்டாட்டங்களை வரையறுப்பது சடங்குகள் அல்ல, நமது உறவுகளே என்பதை நினைவூட்டுகின்ற இது ஆழமாக ஒலிக்கிறது.

இந்த பிரச்சாரம் குறித்து பேசிய கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் & தலைமை பிராண்ட் அதிகாரி தான்யா துபாஷ் (அவள்/அவர்) கூறுகையில், "#CelebratingAcceptance மூலம், ஏற்றுக்கொள்ளுதல் அன்றாட வாழ்க்கையில்— நம் வீடுகளிலிருந்து நம் அக்கம்பக்கங்கள் வரை— எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை ஆராய்வதற்கு கதைசொல்லலைப் பயன்படுத்தியுள்ளோம். 'The Roommate' மூலம், நாம் பெரும்பாலான நேரத்தைச் செலவிடும் பணியிடத்தில் அனைவரையும் உள்ளடக்குதல் என்பது எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து அர்த்தமுள்ள உரையாடல்களைத் தூண்ட முயல்கிறோம். உள்ளடக்குதல் என்பது அரிதாகவே ஒரு பெரிய அறிவிப்பு என்பதை இந்தப் படம் நினைவூட்டுகிறது. அது உங்களுக்கு வாய்ப்பளித்து, நீங்கள் தயாராக இருக்கும்போது உங்கள் கதையைப் பகிர அனுமதிக்கும் ஒரு குழுவின் இயல்பான தன்மையே ஆகும். அதுவே நாங்கள் கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தில் கட்டியெழுப்ப முயலும் கலாச்சாரமாகும், மேலும் அதிகமான பணியிடங்கள் இதை வளர்த்தெடுக்க வேண்டும் என நாங்கள் விரும்பும் ஒன்றாகும். உறவுகளை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் கொண்டாடவும், அன்பில் வேரூன்றிய பாரம்பரியங்களை உருவாக்கவும் இது மக்களுக்கு ஊக்கமளிக்கும் என நம்புகிறோம்." என்று கூறினார்.

இதை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக, கோத்ரேஜ் DEI லேப் நிறுவனத்தின் தலைவர் பரமேஷ் ஷாஹானி (அவர்/அவன்) கூறுகையில்,"கோத்ரேஜ் DEI லேப் நிறுவனத்தில், பணியிடத்தில் LGBTQIA+ உள்ளடக்குதல் என்பது ஒரு புதிய சக ஊழியர் எவ்வாறு வரவேற்கப்படுகிறார், அனைத்து பாலினத்தவருக்கான கழிவறைகள் போன்ற உள்கட்டமைப்பின் கிடைக்கும் தன்மை, மற்றும் ஒரே பாலின சேர்க்கை பலன்களை அங்கீகரிக்கும் கொள்கைகள் போன்ற பல சிறிய தருணங்களில் கட்டமைக்கப்படுகிறது என்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். இந்த திரைப்படம் ஒரு உள்ளடக்கிய பணியிடத்தின் மனநிலையை அழகாக படம்பிடித்துக் காட்டுகிறது. எங்கள் கோத்ரேஜ் DEI லேப்-க்கு Queer Directions என்ற கூட்டு வெளியீட்டு முத்திரை உள்ளது, மேலும் அடுத்த தலைமுறை புதுமர் தலைவர்களை வளர்க்க Godrej Queer India Fellowship ஐ ஒழுங்கமைக்க நாங்கள் உதவுகிறோம். கோத்ரேஜ் ஃபவுண்டேஷன் இந்திய LGBTQIA+ லாபநோக்கற்ற அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் பிரைட் ஃபண்ட் இந்தியா போன்ற LGBTQIA சமூக முயற்சிகளிலும் பங்கேற்கிறது. இந்த அனைத்து செயல்பாடுகளின் மூலமும், மேலும் மேலும் வீடுகளும் பணியிடங்களும் அன்றாட கூட்டாளித்துவத்தை வளர்த்தெடுக்கும்போது, ஏற்றுக்கொள்ளுதல் விதிவிலக்காக இருப்பதிலிருந்து இயல்புநிலையாக மாறும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

இயக்குநர் ராஸ் ரஹ்மான் அலி (அவர்/அவரை) கூறும்பொழுது,"சில நேரங்களில், உள்ளடக்கம் என்பது ஒரு அறிக்கையை வெளியிடுவதைப் பற்றியது அல்ல, மாறாக யாரும் தாங்கள் யார் என்பதை விளக்க வேண்டிய அவசியத்தை உணராத ஒரு இடத்தை உருவாக்குவதைப் பற்றியது ஆகும். அங்கே எந்த மோதலும் இல்லை, பெரிய பேச்சும் இல்லை, பிரியங்காவை அன்புடன் எதிர்கொள்ளும் ஒரு குழு மட்டுமே. அந்த தருணத்தில் அயானும் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அவரது முதல் நாளில் அது நடப்பதைப் பார்த்து, இந்த இடம் அவரும் தன்னைத் தானே வெளிப்படுத்தக்கூடிய ஒரு பணியிடம் என்பதை அவர் உணர்கிறார். ஒரு உண்மையான உள்ளடக்கமான பணியிடம், பேசுபவருக்கு மட்டுமல்ல, அறையில் உள்ள அனைவருக்கும் நம்பிக்கையளிக்கிறது." என்றார்.

இந்த தீபாவளியில், கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமம், வீட்டிலும் வேலையிடத்திலும், அனைத்து வடிவங்களிலும் உள்ள உறவுகளைக் கொண்டாட அனைவரையும் அழைக்கிறது.







இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.